4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 203 /2019 நாள்: 23.02.2026 பி. வா.சா.1 – ரவிச்சந்திரன்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் உடுமலைப்பேட்டை செல்லம் நகரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் சம்பந்தப்பட்ட கருவிகளை விற்பனை செய்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசராணை வாக்குமூலத்தில் அதை படித்துப் பார்த்து தான் கையொப்பம் போட்டேன். 03.02.2019 அன்று வாதியிடம் ரூ.30 லட்சம் கடனாக பெற்றுக் கொண்டு அதற்கு ரூ100க்கு மாதம் ரூ1 வட்டி தருவதாக ஒப்புக் கொண்டு ஒரு கடனுறுதி சீட்டு அன்றே எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கடனுறுதி சீட்டு தகுந்த மறுபயன் உடையது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக கடன் வாங்கவில்லை கடனுறுதி சீட்டு வாதிக்கு எழுதி கொடுக்கவும் இல்லை நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வாதிக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை வாதியை யாரென்றே எனக்கு தெரியாது என்று சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதி பலபேரிடம் கடன் கொடுத்து இந்த வழக்கை போல் பல நபருக்கு மேல் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். செல்வம், பிரதாப் சொல்லி மேற்கண்ட விவரம் எனக்கு தெரியும். மேற்படி நபர்கள் மீது எந்த நீதிமன்றத்திலும் கடனுறுதி சீட்டு வழக்கு தாக்கல் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதி முன்னறிவிப்பு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நான் கடனுறுதி சீட்டு

எழுதி கொடுக்கவில்லை என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு கடனை திரும்ப செலுத்த வசதியில்லை என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கை தள்ளுபடி செய்தவற்கு வேறு காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். தீர்ப்புக்கு முன் எனது சொத்தை ஜப்தி செய்ய வேண்டும் என்று வாதி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி மனு தாக்கல் செய்தார் என்றும், அதற்கு நான் எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி என்னை நொடிப்பு நிலையினராக அறிவிக்க கோரியும் எனது சொத்தை ஜப்தி செய்து ஏலத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள கடனுறுதி சீட்டின் அடிப்படையில் தான் என்னை நொடிப்பு நிலையினராக அறிவிக்க வேண்டும் என்று வாதி மனுதாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கில் தீர்ப்பாணை பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் வாதி நொடிப்பு நிலை மனு உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்தை ஜப்தி செய்வதற்கு வாதி தாக்கல் செய்த மனுவிற்கு எதிராக நான் தாக்கல்செய்த எதிருரையில் ஏற்கனவே மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை 09.05.2019 ல் பி.தங்கவேல் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஜப்தி மனுவை படித்து பார்த்து எதிருரை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் மேற்படி எதிருரையில் தாவா கடனுறுதி சீட்டை எழுதி கொடுக்கவில்லை என்றும், கடன் எதுவும் வாதியிடம் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்கு மூலம் சரியாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா தொகையை வட்டியுடன் திரும்ப வாதிக்கு செலுத்த கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல, வாதி கோரிய பரிகாரம் கிடைக்க தக்கது என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.23 18:43:05 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.